செ.வெ.எண்:25 நாள்: 12.11.2019

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், நாமக்கல்

## பத்திரிக்கை செய்தி

சர்வதேச அளவிலான திறனாய்வு போட்டிகள் 2021 ஆண்டு ஷாங்காய் மாநகரத்தில் நடைபெற உள்ளது. இதன் தொடர்பாக தேசிய அளவிலான திறனாய்வு போட்டி" India Skills 2020" என்ற பெயரில் ஜுலை 2020 மாதத்தில் நடத்திட அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னோடியாக போட்டியாளர்களினை தேர்வு செய்திட கரூர் மாவட்ட அளவிலான திறன் போட்டி ஜனவரி 2020 மாதத்தில் நடைபெற உள்ளது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

1.1.1999க்குப் பின் பிறந்தவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு தகுதி உடையவராவர்.

Mechatronics, Manufacturing Team Challenge, Aeronatical Engineering, Cloud Computing, Cyber Security, Water technology and IT Network Cabling ஆகிய ஏழு திறன் பிரிவுகளுக்கு மட்டும் 01.01.1996 பின் பிறந்தவர்கள் தகுதி உள்ளவராவர்.

பள்ளிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழிற்நுட்ப கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தற்பொழுது பயிலும் மற்றும் பயின்றவர்களும், தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தகுதியுள்ள நபர்களும் விண்ணப்பிக்கலாம்.

திறன் போட்டியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ள போட்டியாளர்கள் அவர்களது விவரங்களை http://worldskillindia.co.in. என்கின்ற இணையதளம் மூலம் நவம்பர் 2019 மாத இறுதிக்குள் பதிவு செய்யலாம். மேலும் விவரங்களுக்கு 04286– 222235 என்ற தொலைபேசி மூலம் உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் , நாமக்கல் அவர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கரூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.